DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 65/2016 |
| Deposition of Witness for | : | P.W.11 |
| Name | : | **திரு. செல்வராஜ்** |
| Father's Name | : | **பொன்னுசாமி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 4, 6, 8 ஆஜர். மற்ற எதிரிகள் 1 முதல் 3, 5, 7, 9 முதல் 12 வரை ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 7, 9 முதல் 12 வரை எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.11.2025

(காணொளி வாயிலாக சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் சிங்காரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2015 ம் தேதி சிவகங்கை மாவட்டம் பூவந்தி வட்டம் பழையனூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பழையனூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் ஆஜர் செய்த முதல் தகவல் அறிக்கையை பெற்று பழையனூர் காவல் நிலைய குற்ற எண்.10/2015 பிரிவுகள் 147, 148, 294 பி, 323, 324, 336, 307 மற்றும் பிரிவு 3 of TNPPDL Act வழக்கு பதிவு செய்திருந்ததை எனது

Approved

பார்வைக்கு வைத்ததை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு சம்பவயிடமான கீழராங்கியம் மந்தை முன் சென்று ம் சம்பவயிட ஆஜர் சாட்சிகள் ஜெயக்குமார், மற்றும் கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.8** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.9** ஆகும்.

2. பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை வைத்து உடைந்த ஓட்டின் இரண்டு உதிரி பாகங்களை 17.00 மணியளவில் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியும், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.10** ஆகும். பின்பு சாட்சிகள் சண்முகம், செல்வகணபதி, சிவரஞ்சனி, ஜெயமணி, ராஜேஸ்வரி, நாகராஜன், பால்சாமி ஆகியோர்களையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் மேலும் பார்வை மகஜர் சாட்சிகள் ஜெயக்குமார், மற்றும் கணேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகளை விசாரணையிலிருந்தும் இவ்வழக்கில் வாதி கொடுத்த புகாரில் எதிரிகள் முருகானந்தம், மாரி, ஆதிமூலம், இளங்கோவன், போஸ், ஜெயக்குமார், ராஜா, ராஜேந்திரன், பழனி, லதா, முத்துலட்சுமி மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரியவந்தது.

3. மேற்கண்ட கண்டுள்ள புகாரில் கண்டுள்ள எதிரிகள் பாலமுருகன், சிவனேஸ்வரன் ஆகியோர்கள் சம்பவயிடத்தில் இல்லையென வாதியே தனது மறு வாக்குமூலத்தில் நான் பதட்டத்தில் கூறியதாக சொல்லியுள்ளார். இவ்வழக்கில் மற்ற எதிரிகளை தேட வருகையில் எதிரிகள் அனைவரும் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுவிட்டதால் இவ்வழக்கில் காயம்பட்ட சண்முகம், ஜெயமணி, சிவரஞ்சனி மற்றும் செல்வகணபதி ஆகியோர்களுக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கியது தொடர்பாக அறிக்கை வழங்கிய மருத்துவர் காளிரத்தினம் அவர்களை 03.04.2015

தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. மேலும் அந்த அறிக்கையில் அடிப்படையில் முதல் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிய திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் காயச்சான்றிதழ் பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். அந்த காயச்சான்றிதழில் மேற்சொன்ன நால்வருக்கும் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். பின்பு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம் 91 அ.த.சா.ஆ.11** ஆகும்.

5. பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.முத்துக்கிருஷ்ணன், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் சம்பவத்திலிருந்து நீக்கப்பட்ட பாலமுருகன், சிவனேசன் ஆகியோர்களை ஆகியோர்களை நீக்கம் செய்ததது தொடர்பாக நீக்கல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு எனது புலன் விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் முருகானந்தம், மாரி, ஆதிமூலம், இளங்கோவன், போஸ், ஜெயக்குமார், ராஜா, ராஜேந்திரன், பழனி, லதா, முத்துலட்சுமி மற்றும் மூர்த்தி ஆகியோர்களின் மீது இதச பிரிவுகள் 147, 148, 294 பி, 323, 324, 336, 307 மற்றும் பிரிவு 3 of TNPPDL Act-ன் படி குற்ற இறுதி தாக்கல் செய்தேன். எனது விசாரணையின் போது அ.சா.5, 6 இவ்வழக்கு சம்பவம் பற்றி அவர்களது வாக்குமூலங்களில் கண்டவாறு தான் சொல்லியிருந்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இவ்வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தியதாக எந்தவிதமாக ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை 3 வது காலத்தில் 13.30 மணி என்பது 16.30 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறுதலாக எழுதப்பட்டதால் அவ்வாறு திருத்தப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் பின்பக்கத்தில் பாலுச்சாமி, நாகராஜன் ஆகியோரின் வீட்டுக் கண்ணாடி கதவுகள்

உடைந்ததுவிட்டன என்றும் அதன் மதிப்பு ரூ.1000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. புகார்தாரரின் வாக்குமூலத்தில் நாகராஜன், பாலுச்சாமி ஆகியோர்களின் வீட்டின் டைல்ஸ் உடைந்துவிட்டது என கூறியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அதில் இடைச்செருகலாக அதன் மதிப்பு ரூ.100/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற சாட்சிகளின் வாக்குமூலத்தில் டைல்ஸ் உடைந்தது சேதமாகிவிட்டது என்றும் அதன்மதிப்பு பற்றி கூறவில்லை என்றால் சரிதான். நான் தயார் செய்த குற்ற இறுதி அறிக்கையில் சாட்சிகளின் வீடுகளில் ஓடு உடைந்துவிட்டது என்றும் அதன் மதிப்பு ரூ.100/- இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. என்னுடைய விசாரணையின் எதிரிகள் அருவாளால் தாக்கியதாக சண்முகம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் வீச்சருவாளால் தாக்கியதாக தான் கூறியிருக்கிறார். சார்பு ஆய்வாளர் தயாரித்த முதல் தகவல் அறிக்கையில் 14 பேர் மற்றும் சிலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் வகையறாவிற்கும் புகார்தாரர் வகையறாவிற்கும் ஏற்கனவே தண்டீஸ்வரர் கோவிலில் கல்வெட்டு வைப்பதன் காரணமாக பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். சாட்சிகள் சண்முகம், சிவரஞ்சனி, செல்வகணபதி, ஜெயமணி ஆகியோர்கள் தெரிந்த 30 நபர்கள் தாக்கியதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பார்த்தால் தான் கூறமுடியும்.

4. என்னுடைய விசாரணையில் மொத்தமாக இரு தரப்பும் கூட்டமாக 100 நபர்கள் கலந்துகொண்டதாக தெரிந்துகொண்டேனா என்றால் இருதரப்பினரும் சட்டவிரோதமாக கலந்துகொண்டனர். எதிரிகள் தரப்பில் கொடுத்த புகாரின் பேரில் புகார்தாரர்கள் மேல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்கு ஏதுவாக

காவல்நிலையத்தில்வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

Adobe